முடிவடைந்து, அந்தக் கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்ந்து, தற்போது படித்து வருகிறார்கள். கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்காக, மீதமுள்ள 30 கல்லூரிகளுக்குத் தற்போது நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் பொறியியல் கல்லூரிகள் 4; பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 11. இந்தப் பொறியியல் கல்லூரிகளுக்கும், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் சேர்த்து இப்போது கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல், நிலம் தேர்வு செய்து, கட்டடப் பணிகளை மேற்கொள்ள 7 கல்லூரிகள் தயார் நிலையில் உள்ளன. அந்தக் கல்லூரிகளில் ஒன்றைத்தான், மாண்புமிகு உறுப்பினர் தனது வேடசந்தூர் பகுதியிலே உள்ள நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அந்தக் கல்லூரிக்கு இந்த ஆண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தக் கல்லூரிக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 321, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

321—

கூட்டுறவுச் சங்கம்

***4386—திரு. மு.வீ. கருப்பையா:**

திரு. எல். வெங்கடேசன்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பையேற்றபோது, தமிழ்நாட்டிலுள்ள 4,529 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 606 சங்கங்கள் நலிவுற்ற நிலையில் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக, முதல் இரண்டு ஆண்டுகளிலேயே 467 சங்கங்களின் செயல்பாடுகள் மேம்பாடு அடைந்தன. மீதமுள்ள 139 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 2013-2014 ஆம் நிதியாண்டில், 72 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் புனரமைத்து, அவற்றின் வணிகத் திறனை ரூபாய் 1 கோடியாக உயர்த்த சிறப்பு காசுக் கடன் உதவியாக, ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா 50 இலட்சம் ரூபாய் வீதம், 36 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க வழங்கப்பட்டது. அதேபோன்று, இந்த 2014-2015 ஆம் நிதியாண்டில், மீதமுள்ள 67 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் புனரமைக்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா 50 இலட்சம் ரூபாய் வீதம், 33.50 கோடி ரூபாய் சிறப்பு காசுக் கடன் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10-50

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி நாளிதழில் நாள்தோறும் கேள்வியும் நானே, பதிலும் நானே என்று இரட்டை வேடம் போட்டு அப்பாவித் தமிழினம் அழியக் காரணமாக இருந்த தீய சக்தி கருணாநிதியின் மகளுக்கு அன்புப் பரிசு வழங்கி, ஈழத் தமிழர்களின் கொலைகளுக்குக் காரணமாக இருந்த ராஜபக்சேவை பகிரங்க

மன்னிப்பு கேட்க வைத்த தீய சக்தியை அழிக்க வந்த மகாசக்தி, மாண்புமிகு கழகக் காவல் தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட போடிநாயக்கன்பட்டி, சித்தாலங்குடி, நீரேத்தான், சோழவந்தான் தென்கரை, ராமயன்பட்டி, இரும்பாடி, கருப்பட்டி, கச்சைகட்டி ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நிருவாகக் கோளாறு காரணமாக நலிவடைந்திருந்ததை மாற்றி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் நிருவாகத் திறமையின் காரணமாக புத்துயிர் பெற்றன. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விவசாயிகள் மற்றும் ஏழை, எளியோர் ஏற்றம் பெறவும், பருவ மழை பொய்த்துவிட்டதால், தென்னை, வாழை, நெல், கரும்பு, வெற்றிலை, சோளம், கம்பு, பூக்கள் ஆகியவை பாதிப்படைந்துவிட்டன. எனவே, கருணை மழை பொழியும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெற, கூட்டுறவு வங்கிகள் மூலமாக மாற்றுத் தொழில் செய்ய கடனுதவி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் முதல் மாவட்ட மத்திய வங்கிகள் வரை அனைத்தும் ஒரு சிறப்பான இடத்தை எய்தியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்பொழுது வறட்சி ஏற்பட்டுள்ளது என்றும், அதற்கு மறு சுழற்சி கடன் வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதுபோன்ற கருத்துருவோ, கோரிக்கையோ எந்த விவசாயியிடமிருந்தும் வரவில்லை. அப்படி கோரிக்கை பெறப்படும்பொழுது, அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களுடைய

2014 ஆகஸ்ட் 4]

கோரிக்கையை கூட்டுறவுத் துறை அதிகாரிகளின்மூலமாக பரிசீலிக்க முயற்சி எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைக்க அரசு தலா ரூ.50 இலட்சம் ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், வணிகத் திறன் ரூ.1 கோடிக்குமேல் இருந்தும், பெரும்பாலான தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன என்பதை மறுக்க முடியாது. அதேபோல, விவசாய நகைக் கடன் கேட்டு விண்ணப்பிக்கும் சங்க உறுப்பினர்களை 10 சதவீதம் பங்குத் தொகை கட்ட வேண்டும் என்றும், 3 சதவீதம் காப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என்றும் நிர்பந்தம் செய்வதால், விவசாய நகைக் கடன் பெறுவதற்கு விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். எனவே, நட்டத்தில் இயங்கும் வேளாண் கூட்டுறவுச் சங்கங்களை நட்டத்திலிருந்து மீட்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? விவசாய நகைக் கடன் பெறும் விவசாயிகளை ஊக்குவிக்கும்வகையில் கடன் தொகையில் 10 சதவீதம், இன்சூரன்ஸ் தொகையில் 3 சதவீதம் செலுத்தக் கோரும் நடவடிக்கையைத் தளர்த்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு அச்சங்கங்களின் வியாபாரத் தன்மை இருந்தாலும் நட்டம் அடைவதாகத் தெரிவித்தார்கள். அதுபோன்ற சங்கங்களில் அதிகப்படியான பணியாளர்கள் இருந்ததன் காரணமாகத்தான் அதுபோன்ற நிலைமை இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அதிகப்படியாக இருந்த பணியாளர்களை வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணியமர்த்தியதன் மூலமாக அந்தச் சங்கங்களெல்லாம் இன்று நல்ல நிலைக்கு*

வந்துகொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையில் 2,886 சங்கங்கள்தான் நல்ல நிலையில் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அவர்களின் சீர்மிகு திட்டங்களால் கடந்த மூன்று ஆண்டுகளில் 4,439 சங்கங்கள் இன்று நல்ல நிலைக்கு வந்துள்ளன. ஆகவே, இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் மாண்புமிகு அம்மா அவர்கள் சீரிய நடவடிக்கை எடுத்ததன்காரணமாக 1,553 சங்கங்கள் சிறப்பான இடத்தை எய்தியிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையெல்லாம் நவீனமயமாக்குகின்றவகையில், அச்சங்கங்களுக்குக் கணினி வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொது வேளாண் சேவை மையங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 2,104 சங்கங்கள் 58.14 கோடி ரூபாய் அளவிற்கு, ஒவ்வொரு சங்கமும் 50 சதவீதம் அல்லது உயர்ந்தபட்சம் ரூ.20 இலட்சம் வரை விவசாயக் கருவிகள் வாங்கலாம்.

முற்பகல் 10-55

சிறு, குறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு விடலாம், அதன்மூலமாக இலாபம் ஈட்டலாம் என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்ததன் பயனாக, இன்றைக்கு அந்தச் சங்கங்கள் கடந்த ஆண்டில் மட்டும் ஐந்து கோடி ரூபாய் வரை இலாபம் ஈட்டி வந்திருக்கின்றன. பொதுச் சேவை மையங்கள்மூலம் கிராமங்களில்கூட விவசாயிகள் மற்றவர்கள் கணினியில் சிட்டா மற்றும் பஸ், டிரெயின் டிக்கெட் எடுக்கலாம் எனக் கொண்டு வந்து, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அத்தனைச் சங்கங்களும் இலாபம் ஈட்டுகிற வகையில் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, எந்தச் சங்கங்களும் நஷ்டத்தில் இயங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள், அதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.